பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆவணி 15 (31—8—72) வியாழன் வெளியூர்: ஆவணி 16 (1—9—72) வெள்ளி [இதழ்: 66

'சீர்கேடான நிலைமை அதிகரித்தே வந்திருக்கிறது'

'மத்திய அரசின் செலவினங்கள் தவருன முறையில் வகைப்படுத்திக் காட்டப்பட்டிருக்கின்றன'

'அமைச்சகங்களின் செலவினங்களில் வழக்கத்துக்கு மாருன அம்சங்கள் காணப்படுகின்றன'

பொதுக் கணக்குக் குழுவின் கடும் எதிர்ப்பு — இரா. செழியன் அறிக்கை

புதுடில்லி, ஆக. 31—

"நிதி நிலை அறிக்கையின் ஒதுக்கீட்டைவிட, அதிகப்படியாக ஆண்டுதோறும் மத்திய அரசு தனது செலவை அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது"

என்பதைப் பொதுக் கணக்குக் குழுத் தலைவர் இரா. செழியன், மக்களவையில் சுட்டிக்காட்டினர்.

"நிதி நிலை அறிக்கையிலுள்ள ஒதுக்கீட்டைவிட மத்திய அரசு, 1970—71-ல் ரூ. 55.75 கோடி அதிகமாகச் செலவிட்டிருக்கிறது; இது எல்லா ஆண்டுகளையும்விட அதிகமான தொகையாகும்; இதுபோன்று படிப்படியாக செலவு அதிகரித்துவருவது குறித்து பொதுக் கணக்குக் குழு ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது"

என்பதையும் இரா. செழியன் குறிப்பிட்டுக் காட்டி — அதன் கடும் கண்டனத்தையும் அவையில் விளக்கிக் கூறினர்.

மத்திய பொதுக்கணக்குக் குழுத் தலைவர் இரா. செழியன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் 49-வது அறிக்கையை மக்களவையில் அளித்தார்; அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"1965-ல் மத்திய அரசு தனது நிதி நிலை அறிக்கையைவிட அதிகமாக ரூ. 3.75 கோடி செலவிட்டது; அது படிப்படியாக அதிகமாகி 1969-70-ல் ரூ. 27.77 கோடியாக ஆயிற்று; இந்த நிலைமையைச் சீரடையச் செய்யவேண்டும்; இம்மாதிரி அதிகச் செலவு ஏற்படுவதற்கான அடிப்படை காரணத்தைக் கண்டுபிடித்தாகவேண்டும்; இந்த நிலையைப் போக்கத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லையேல், நிதி நிலை அறிக்கை மூலமான கட்டுப்பாடு என்பது தொலை தூரக் கூக்குரலாகி விடும்' என்று பொதுக் கணக்குக் குழு திருமடத திருமப எடுத்துக் கூறியிருந்தும், இந்தச் சீர்கேடான நிலைமை அதிகரித்தே உள்ளது; இது ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது.

"1971 மார்ச் 31-க்கு முந்திய ஆருண்டுக்கால அளவில் — ஒவ்வொரு ஆண்டும் மத்திய செய்தி — ஒலிபரம்பு அமைச்சகத்திற்கு அளிக்கப்பட்ட மானியமானது தொடர்ந்து அதிகரித்தே இருக்கின்றன.

தேசிய நெடுஞ்சாலை பராமரிப்பு — வெளி நாட்டு வர்த்தக அமைச்சகம்— ஓய்வுகால ஊதியச் செலவுகள் — இரயில்வே துறைக்கான ஓய்வு கால நிதி— மத்திய போக்குவரத்து அமைச்சகம் - மத்திய பொதுப் பணித் துறை ஆகிய இனங்களின் கீழ் ஏற்கனவே அதிகச்செலவுகள் ஏற்பட்டுள்ளன; இதுபற்றி பொதுக் கணக்குக் குழு ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறது.

"1970-71-ல் வாக்கெடுப்பு மூலம் ஒதுக்கீடான மத்தியத் தொகை— துணை மானியங்கள் ஆகியவற்றைவிட அதிகப்படியாகச் செய்யப்பட்டுள்ள செலவுகளில் வழக்கத்துக்கு மாருன அம்சங்கள் காணப்படுகின்றன; செலவினங்கள் தவருன முறையில் வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன."

போப்பாம்ஸ் பிராட்வே 'பிரகாசம் சாலை' எனப் பெயர் மாற்றம்

சென்னை மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, ஆக. 31—

டி. பிரகாசம் நூற்றுண்டு விழாவையொட்டி, 'போப்பாம்ஸ் பிராட்வே சாலை'—'பிரகாசம் சாலை' எனப் பெயர் மாற்றம் பெறுகிறது.

சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மூலம் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

குடிசை மாற்று வாரியப் பணிக்கு

மத்திய அரசின் சிறப்பு மானிய உதவி

'தமிழக அரசின் செயல் திட்டத்திற்கு கிடையாது'

மாநிலங்களவையில் அறிவிப்பு

காரணங்கள் தருவதன் மூலம் உறுதியாகிறது

புதுடில்லி, ஆக. 31

"தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகின்ற குடிசை மாற்று வாரியப் பணிக்கு மத்திய அரசின் சிறப்பு மானிய உதவி எதுவும் கிடைக்காது" என்று மாநிலங்கள் அவையில் மத்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

"சேரிச் சீரமைப்பு என்பது மாநில அதிகாரத்திற்கு உட்பட்டது; இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவி மாநிலத் திட்டப் பணிகளுக்கென்று உள்ளவற்ருேடு சேர்த்துவிடப்படுகிறது; ஆகவே, குடிசைச் சீரமைப்புக்கென்று தனியே மானியம் எதுவும் மத்திய அரசு வழங்குவதில்லை" என்றும் தெரிவிக்கப்பட்டது.

"ஒவ்வொரு மாநிலமும் அதனதன் தேவைக்கேற்பவும் — அவசரத்துக்கேற்பவும் குடிசைப் பகுதிகளின் சீரமைப்புக்கான திட்டங்களை வகுத்துக்கொள்ளலாம்; எனவே, தமிழ்நாட்டின் குடிசை மாற்றுத் திட்டங்களுக்குச் சிறப்பு மானியமோ, உதவியோ அளிப்பதற்கில்லை" என்றும் தெரிவிக்கப்பட்டது.

நடுநிலைப் பள்ளிகளில் 900 பி.டி. ஆசிரியர் நியமனம்: மத்திய அரசு அங்கீகாரம்

திருச்சி, ஆக. 31—

தமிழ் நாட்டிலுள்ள நடுநிலை (ஹையர் எலிமெண்டரி)ப் பள்ளிகளில், 1972—73-ம் ஆண்டில் 900 பி.டி. ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிப்பதற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது.

மத்திய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

பள்ளி ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது

தமிழ்நாடு அரசு அறிவிப்பு

நிர்ணயக் குறிக்கோள் பற்றி விளக்கம்

சென்னை, ஆக. 31—

தனியார் பள்ளிக்கூடங்கள் உட்பட எல்லாப் பள்ளி ஆசிரியர்களும் 58 வயதில் ஓய்வு பெற வேண்டும்—என்று நிர்ணயித்துத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து (1973-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல்) இந்த உத்தரவு நடைமுறைக்கு வரும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

பள்ளி ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது பள்ளிக்கூடத்திற்குப் பள்ளிக்கூடம் வித்தியாசம்படுகிறது — ஒரே மாதிரியாக இல்லை.

அரசாங்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆக உள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் (நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்) நடத்தும் பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது 58 என்றே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனல், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது பள்ளிக்குப் பள்ளி வேறுபடுகிறது; தனியார் நடத்தும் செகண்டரி பள்ளிக்கூடங்கள் — தனிப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 58 ஆகவும், தொடக்கப் பள்ளிகள் — ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது 60 ஆகவும் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

இதேபோல், தனியார் நிர்வாகத்தில் உள்ள செகண்டரி பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் 60 வயதுவரை வேலையில் இருக்க அனுமதிக்கப்படுகிருர்கள்.

பள்ளி ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது இப்படி இடத்திற்கு இடம் வேறுபடுவதால், அதை மாற்றிச் சீரான ஓய்வு பெறும் வயதை நிர்ணயிக்க அரசு முடிவு செய்தது.

எனவே, வருகிற கல்வி ஆண்டிலிருந்து பள்ளி ஆசிரியர்கள் எந்த அமைப்பின்கீழ் (அரசு — உள்ளாட்சித்துறை — தனியார்) பணியாற்றினலும், 58 வயது அடைந்ததும் ஓய்வு பெற வேண்டும்—என்று ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை நிர்ணயித்துத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோடை விடுமுறைக்குப் பிறகு அடுத்த ஆண்டு (1973) ஜூன் மாதத்திலிருந்து இந்த உத்தரவு செயலுக்கு வரும்.

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு 58 வயதை அடைந்த ஆசிரியர்கள், கல்வி ஆண்டு மத்தியில் ஓய்வு பெருமல் நீடிக்க விரும்பினல் அடுத்த கோடை விடுமுறை வரை அவர்கள் நீடிக்க அனுமதிக்கப்படுவர்; எனினும், இந்தக் குறுகிய காலமும் புதிய நியமன விதிகள் அடிப்படையில் செய்யப்பட வேண்டும்— என்று அந்த உத்தரவில் அரசு அறிவித்துள்ளது.

துயரச் சம்பவம் பற்றி நடவடிக்கை

அண்டை மாநிலங்களின் அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை— அமைச்சர் அன்பழகன் தகவல்

சென்னை, ஆக. 31—

"காய்ச்சலைத் தணிக்கும் ஒரு குறிப்பிட்ட மருந்திஞல் குழந்தைகள் மரணமடைந்த துயரச சம்பவத்தைத் தொடர்ந்து இந்த மருந்து உற்பத்தியில நச்சுக் கலவை எப்படி ஏற்பட்டது என்பது உள்ளிட்ட எல்லாப் பிரச்சினைகளையும் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி போலீசாரிடம் கூறப்பட்டிருக்கிறது"

என்று நலத்துறை அமைச்சர் க. அன்பழகன், செய்தியாளரிடம் கூறினர்.

"இந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டாம; எந்த மருந்துக் கடையிலாவது விற்ருல் உடனே பறிமுதல் செய்யுமபடி அண்டை மாநில அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுளளது" என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் புதிய கலையரங்கம்

முதலமைச்சர் தலைமையில் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி திறந்துவைக்கிருர்

சென்னை — மைலாப்பூரில் ரூ. 9 இலட்சம் செலவில் புதிய கலையரங்கம் கட்டப்பட்டிருக்கிறது.

சென்னையிலுள்ள 'பாரதீய வித்யா பவன' சார்பில் கட்டப்பட்ட இந்த கட்டடத்தின் திறப்பு விழா ஆகஸ்டு 2-ந் தேதி நடக்கிறது.

விழாவிற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்குகிருர்.

புதிய கட்டடத்தைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி திறந்து வைக்கிருர்.

'பாரதீய வித்யா பவனை' நிறுவிய டாக்டர் கே. எம். முன்ஷியின் படத்தை ஆளுநர் கே. கே. ஷா திறந்து வைத்துப் பேசுகிருர்.

'கருத்துள்ள நகைச்சுவையின் மூலம் கலையுலகில் தனி இடம் பெற்றார்'

'கலைவாணரின் தொண்டுள்ளத்தைத் தமிழ் நாட்டு மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்

நினைவு நாள் விழாவில் பேராசிரியர் அன்பழகன் புகழாரம்

சென்னை, ஆக. 31—

"கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், தமிழ்நாடு இதுவரையில் காணாத வியப்புக்குரியவராவார்; மூடநம்பிக்கையால் ஏற்படும் அடிமைத்தனத்தை—தன்னுடைய சிறந்த நகைச்சுவை கருத்துக்கள் மூலம்—மக்களுக்கு விளக்கிக் கூறினார்.

"நகைச்சுவை மூலம் உண்மையை உணர வைக்கின்ற ஆற்றல் அவரிடம் இருந்தது; உலகம் இதுவரை காணாத அளவுக்கு நகைச்சுவையைப் பயன்படுத்தி—பல நல்ல கருத்துக்களை மக்கள் மனத்தில் பதியம்படிச் செய்தார்; கருத்து வேறுபாடு உள்ளவர்கள்கூட அவருடைய கருத்துக்களைச் சிரித்துக்கொண்டே ஏற்றுக் கொள்வார்கள்.

"தமிழுலகைப் பொறுத்த வரையில், அவர் நவீன சிந்தனையை மக்களிடையே உருவாக்கினார்; அவருடைய காலத்தில்தான் கலை உலகில் நகைச்சுவைக்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டது; கருத்துள்ள நகைச்சுவையின் மூலம் அவர் கலையுலகில் தனி இடத்தைப் பெற்றார்.

"கலைவாணர் மறைந்தாலும், அவருடைய தொண்டுள்ளத்தைத் தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்; கலையை மக்கள் செல்வமாக மாற்றிய அவரை நாம் என்றும் போற்றக் கடமைப் பட்டுள்ளோம்"

என்று நாவலர்வழித் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் நினைவுநாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் புகழாரம் சூட்டிக் குறிப்பிட்டார்.

கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்களின் 16-வது நினைவு நாள் விழா, சென்னை—மைலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது

விழாவிற்கு, திரு. நாரணதுரைக் கண்ணன் தலைமை தாங்கினார்.

விழாவை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் பேசுகையில், 'என். எஸ். கிருஷ்ணனுக்கு தமிழன்' என்ற இனப் பற்று, உறுதியாக இருந்தது; தமிழினத்தின் வளர்ச்சிக்காகவும்—தமிழர்களின் நல்வாழ்விற்காகவும் அவர் பாடுபட்டார்' என்று குறிப்பிட்டார்.

விழாவில் டி. கே. சண்முகம், டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., எஸ். வி. சஹஸ்ரநாமம், எஸ். டி. சுந்தரம், ஏ. பி. எஸ். மணி மற்றும் பலர் பேசினர்.

அனைவரையும் வரவேற்றுப் பேசிய நாராயணன் (சென்னை ஆற்காடு சாலைக்கு கலைவாணர் சாலை என்று பெயரிட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

தொடக்கத்தில் குடந்தை சங்கர் குழுவினரின் விகடக் கச்சேரி நடைபெற்றது.

வருமான வரி பாக்கிகள்

புதடில்லி, ஆக. 30—

"வருமான வரி விகிதம் அதிகமாக இருப்பதுதான் வரி பாக்கி அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்று அரசு கருதவில்லை.

முதல் முப்பது பேரிடம்தான் பெருந்தொகை வரி பாக்கி உள்ளது; மொத்த வரி பாக்கி ரூ. 438 60 கோடி; இது 1947லிருந்து சேர்ந்து வந்துள்ள பாக்கியாகும்"

என்று துணையமைச்சர் கே. ஆர். கணேஷ் நாடாளுமன்ற மேலவையில் கேள்விகளுக்கும் பதிலளிக்கையில் கூறினார்.

"வரி பாக்கி உள்ளவர்கள்மீது வருமான வரிச் சட்டத்தின்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மக்கள் நலத் திட்டத்திற்கு முதலீடு செய்யவே மத்திய அரசிடம் நிதியுதவி கேட்கிறோம்

தமிழ் நாடு கேட்பது அதிக அதிகாரமே— தனி நாடு அல்ல!

"தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திற்குள் காங்கிரசு ஆட்சியில் இருபது ஆண்டுகளாகச் செய்ய இயலாதனவற்றை ஏழைகளுக்கும், கீழ்த்தட்டில் கிடப்பவர்களுக்கும் செய்தது.

தமிழ்நாட்டில் உள்ள நாங்கள் விரும்புவது அதிகமான அதிகாரங்கள்—அதிகமான நிதி—தனி நாடு அல்ல!

ஆனால் இப்போதுள்ள நிலை என்ன? ஒவ்வொரு சிறிய பிரச்சினைக்கும் நாங்கள் டில்லியை நோக்கி ஓட வேண்டியிருக்கிறது!

நாங்கள் அதிகமான நிதி கேட்கிறோம் என்றால் ஏதோ தர்மப் பிச்சையாகக் கேட்கவில்லை!

தமிழ்நாட்டு மக்களிடம் வசூலிக்கப்படும் வரிப் பணத்திலிருந்து பெரும் அளவில் பங்கு கேட்கிறோம்; மக்கள் நலத் திட்டத்திற்கு முதலீடு செய்யவே அதைக் கேட்கிறோம்.

ஆரியர்களின் வருகைக்குமுன் தமிழர்கள் இந்தியா முழுதற்கும் சொந்தக்காரர்கள்; இப்போதுகூட இந்தியா முழுதும் எங்களுக்குச் சொந்தமென்றே நினைக்கிறோம்; ஆகவே, தனிநாடு என்ற பிரச்சினைக்கே இடமில்லை!"

—'மெயில்' ஏட்டில் ஜின்னி சாரி என்பவர் எழுதிய மடலிலிருந்து

திருமணச் செலவில் வீண் விரயம்

வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகளை உணருவீர்

நாவலர் அறிவுரை

சென்னை, ஆக. 31—

"நம் நாட்டில் மிக மிகச் சாதாரணக் குடும்பங்கள் எல்லாம் பாழ்பட்டுப் போவதற்கு அடிப்படைக் காரணம், திருமணச் செலவுதான்; எனவே, திருமணத்தின் பேரால் பணத்தை வீண் விரயம் செய்யக்கூடாது; அப்படிச் செலவழித்தால், பின்னர் வாழ்க்கையில் அவதியுற நேரிடும்"

என்று, நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

23—8—72 அன்று சென்னை 90-வது வட்டம் திருவல்லிக்கேணியில், திரு. சி. அப்பைய செட்டியார் திருமண மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது.

திரு. கக்கன் தலைமைவகித்தார்.

தேவேந்திர மீனவர் பஞ்சாயத்துச் சபைத் தலைவர் அ. மனோகரன் முன்னிலையில், ரூ 75,000 செலவில் கட்டப்பட்ட திருமண மண்டபத்தை டாக்டர் நாவலர் திறந்து வைத்தார்.

திருமண மண்டபத்தைத் திறந்துவைத்து நாவலர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"சிறு துளி பெரு வெள்ளம்—என்பதற்கிணங்க, சிறுகச் சிறுகச் சேர்த்து ரூ 75,000 செலவில் அழகுற திருமண மண்டபத்தை அப்பைய்ய செட்டியார் அவர்களின் பெயரால் — சமுதாய நலனைக் கருதி — இங்குள்ள மீனவப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில்— இதை அமைத்துத் தருவதில் உறுதுணையாக இருந்தவர்களையும், இதற்கும் பொருளுதவி புரிந்த அறச் சிந்தனையாளர்களையும், மற்றவர்களையும் பாராட்டுகிறேன்."

திரு. அ. மனோகரன், வழக்கறிஞர் செல்வராஜ், குணசேகரன் மற்றும் பலரும் பேசினர்.

மத்திய அரசு பற்றாக்குறை ரூ. 521 கோடியாம்

புதடில்லி, ஆக. 30—

"1971-72-ல் மத்திய அரசின் பற்றாக்குறை ரூ. 521 கோடியாக இருந்தது"

என்று நிதியமைச்சர் சவாண், நாடாளுமன்ற மேலவையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"விலைவாசிகள் உயர்வுக்கு பற்றாக்குறை நிதிமுறை ஒரு காரணமாகும்" என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

வறுமையின் எல்லைக்கோட்டில் மக்கள் வாழ்கின்றனர்

சோஷலிசத்தைத் தூக்கியெறிந்தவர்கள் முன்னாள் மன்னர்களுக்குச் சலுகை தர முன்வந்திருக்கின்றனர்

நாடாளுமன்ற மேலவையில் கடும் கண்டனம்

புதுடில்லி, ஆக. 30—

"வறுமையின் எல்லைக்கோட்டிற்கும் கீழே நாட்டில் பாதிப் பேர் வாழும்போது, 'சோஷலிஸ்டு அரசாங்கம்' எனச் சொல்லிக்கொள்வோர், ரூ 1075 கோடியை முன்னாள் மன்னர்களின் மறுவாழ்வுக்கு அள்ளித் தந்திருப்பது ஏன்? இந்திரா அரசின் சோஷலிசத்தின் போலித் தன்மையையே இது காட்டுகிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், முன்னாள் மன்னர்களுக்கு இடைக்கால மாற்று நிதி வழங்கும் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது, சோஷலிஸ்டு உறுப்பினர் நாகேஷ்வர் சகாய் சுட்டிக்காட்டினார்.

"கிளிப் பிள்ளையைப் போல் சோஷலிசம் பேசியவர்கள், இன்று அந்த சோஷலிசத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, கொல்லைப்புற வழியாக முன்னாள் மன்னர்களுக்குச் சலுகை தர முன்வந்திருக்கிறது"

என்று முன்னாள் மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவித்தார்; தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

1970-ம் ஆண்டில் நான் மைசூர் முதலமைச்சராக இருந்த போது, மைசூர் மகாராசா தனது அரண்மனை ஒன்றை ஓட்டலாக மாற்ற விருப்பம் தெரிவித்தார். சட்டத் துறையின் யோசனையின் மீது, 'அவ்விதம் செய்ய முடியாது; நீங்கள் என்றைக்குத் தினம் மகாராஜா இல்லையோ—அன்றையத் தினம் முதல் சொத்து முழுதும் அரசுக்குச் சொந்தமாகும்' என்று மகாராஜவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவர் டில்லியை அணுகினார்; அப்போதும் டில்லிக்கு இதே கருத்தை எடுத்துரைத்தோம்; மிதமான (சார்புடைய) கருத்தை அனுப்படி மத்திய அரசு கோரியது; ஆனால் பொதுமக்களின் கருத்து இந்தப் பிரச்சினையில் உறுதியாக இருந்ததால் அது நடக்கவில்லை.

ஆனால், இந்திரா காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்த மூன்றே மாதத்தில், சட்டத் துறை விதித்த தடைகளையெல்லாம் விலக்கிவிட்டு, இன்று அவர் தனது அரண்மனைகளை விற்க வழிவகை செய்துள்ளது; அரசாங்கக் கொள்கைகளிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன."

சட்டத்துக்குப் புறம்பாகச் சலுகையா?

"ரூ. 15 கோடி மதிப்புள்ள மூன்று அரண்மனைகளை மைசூர் மகாராசா விற்பதற்குத் தற்போதைய (இந்திரா காங்கிரசு) அரசு அனுமதித்திருப்பது தவறு; இது சட்டத் துறை ஆலோசனைக்கு எதிரானது.

போலியான திருமண ரத்து வழக்குகள்

நிலச் சீர்திருத்தச் சட்டங்களிலிருந்து தப்பிக்க நோக்கம்

ஐதராபாத், ஆக. 30—

நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கத்துடன், ஆந்திரமாநில நீதிமன்றங்களில் ஏராளமான போலி விவாக ரத்து வழக்குகள் தாக்கலாகிக் கொண்டு வருகின்றனவாம்.

ஆந்திர மாநிலச் சட்டப் பேரவையில் இந்தப் பிரச்சினை உறுப்பினர்களால் எழுப்பப்பட்டது

இந்தக் கவனஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்த முதலமைச்சர் நரசிம்மராவ் குறிப்பிட்டதாவது:—

"நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் குறிக்கோளை முறியடிக்க ஆந்திர மாநில நீதிமன்றங்களில் நூற்றுக்கணக்கான விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுவது உண்மையேயாகும்.

நரசப்பூர் என்ற இடத்திலுள்ள துணை நீதிமன்றத்தில் மட்டும் கடந்த 10 நாட்களில் 150 விவாக ரத்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஆண்டு சனவரி 26 முதல் சூலை 22-ம் நாள் வரையில், ஆந்திர மாநில நீதிமன்றங்களில் மொத்தம் 352 விவாக ரத்து வழக்குகள் தாக்கலாகி இருக்கின்றன.

இந்தக் காலகட்டத்தில், நரசப்பூர் நீதிமன்றத்தில் 41 விவாகரத்து வழக்குகள் தாக்கலாகி—அவைகளில் 24 வழக்குகளில் விவாக ரத்து அனுமதிக்கப்பட்டிருக்கிறது."

'கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்த ஆண்டில் விவாக ரத்து வழக்குகள் தாக்கலாகி யிருப்பது அதிகமாகும்' என்று மேற்குக் கோதாவரி மாவட்ட மாஜிஸ்திரேட்டும் தெரிவித்துள்ளார்.

இவைகளில் சில, நிலச் சீர்திருத்தக் குறிக்கோளை முறியடிக்கவே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

நீதிமன்றத் தீர்ப்புகள்

வட்டாரமொழிகளில் மாற்ற நடவடிக்கை

மாநிலங்களவையில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக 31—

"உயர் நீதிமன்றங்களிலும் தீர்ப்புகள் ஆங்கில திலேயே வழங்குவது எப்பொழுதும் தொடர்ந்து நிலைத்திருக்கும் எனக் கூற முடியாது; மாநில மொழிகளில் மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன"

என்று, நாடாளுமன்ற மேலவையில், சட்ட அமைச்சர் கோகலே தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பெரும்பாலான உயர் நீதிமன்றங்களிலும், தலைமை நீதிமன்றத்திலும் ஆங்கிலமே பயன்படுத்தப்படுகிறது; நாம் முயற்சி செய்து நமது அரசியல் சட்டத்தை அந்தந்த மாநில மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும்; மாநில மொழிகளில் மத்திய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்; இப்போது நாம் அந்த நிலைக்கு எட்டவில்லை"

மத்திய அரசு, மாநில மொழிகளில் சட்டங்கள் மொழிபெயர்க்கப்படுவதற்கு உதவுகிறது; ஆனால், மத்திய சட்ட விதி முறைகள் அனைத்தும் மாநில மொழிகளில் முழுதும் மொழி பெயர்க்கப்படவேண்டு மென்பது இப்பொழுது முடியாத காரியமாகும்."

வறட்சிப்பகுதியில் நில வரி வசூல் தள்ளிவைப்பு

மதுரை மாவட்டத்தில் நடவடிக்கை

மதுரை, ஆக. 30—

"வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் விவசாயிகளிடமிருந்து நில வரி வசூலிக்கப்படுவது தள்ளி வைக்கப்பட்டுள்ளது; இதற்கான உத்தரவை மாநில அரசு பிறப்பித்துள்ளது; இதில் எவ்வித கெடுபிடியும் ஏற்படாது"

என்று, மாநில வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் பி கே. நம்பியார் தெரிவித்தார்.

மதுரை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமையைக் கண்டறிந்த பின்னர், செய்தியாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், பெரியகுளம், வேடசந்தூர் ஆகிய இடங்களில் பருவ மழை பெய்யத் தவறியதால் வறட்சி நிலையும் — குடிநீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது.

அடுத்துவரும் மூன்று — நான்கு வார காலத்தில் மழை பெய்யாவிடில் ஆழப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும்; இதுகுறித்து அறிக்கை அளிக்கப்படும்.

இந்தப் பகுதிகளில் அவ்வளவு வளவு அஞ்சக்கூடிய நிலையில் வறட்சி இல்லை; அவசியம் ஏற்படும்போது அரசு நடவடிக்கை எடுக்கும்."

தர்மபுரிமாவட்டம் வறட்சியினால் பாதிப்பு

வடாற்காடு மாவட்டத்தின் நிலை பற்றித் தகவல்

"தர்மபுரி—வடாற்காடு மாவட்டங்களில், சூலை — ஆகஸ்டு மாதங்களில் மழை பெய்யாததின் காரணமாக மானாவாரி மணிலா புன்செய்த் தானியங்களில் 25 சதவிகிதம் பயிர்கள் நட்டமாகும்"

என்று வருவாய் வாரிய முதல் உறுப்பினர் எம். ஜி. இரசசாராம், செய்தியாளரிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கிருஷ்ணகிரி — ஓசூர் பகுதி நீங்கலாக தர்மபுரி மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது; பெரும்பாலும் எல்லாம் பகுதிகளிலும் கம்பு — சோளப் பயிர்களை விவசாயிகள் பிடுங்கியெறிந்துவிட்டனர்."

தர்மபுரி—வடாற்காடு — செங்கற்பட்டு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுச் சென்னை திரும்பிய அவர், 'வடாற்காடு — செங்கற்பட்டு மாவட்டங்களில் நெற் பயிர் பாதிக்கப்படவில்லை' என்று கூறினர்.

"செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி தாலுகா நீங்கலாக மொத்தத்தில் நிலைமை மோசமாக இல்லை; சூலை — ஆகஸ்டு மாதங்களில் இம்மாவட்டத்தில் சிறிது மழை பெய்துள்ளது" என்றார்.

"வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் — குடியாத்தம் — ஆரணிப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன" என்றார்.

"எல்லா இடங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறைதான் தீவிரப் பிரச்சினையாக உள்ளது; புதிய குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கும் — கிணறுகளை ஆழப்படுத்துவதற்குமான பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது" என்றார்.

இராமநாதபுர மாவட்டத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம்

செப். 12 முதல் 22-ம் நாள்வரை நடைபெறும்

முன் பரிசோதனை நடைபெறும் இடங்கள் பற்றித் தகவல்

மதுரை, ஆக. 30—

முதலமைச்சர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாம் இராமநாதபுர மாவட்டம்—திருப்பத்தூரில் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியில் 12-9-72 முதல் 22-9-72-வரை நடைபெறவிருக்கிறது.

கண் நோயாளிகளின் வசதியை முன்னிட்டு 6 9 72-ல் திருவாடானையில் டாக்டர் கோவிந்தன் மருத்துவமனையிலும், 7-9-72-ல் சிங்கம்புணரி அரசு மருத்துவமனையிலும், 8 9-72-ல் காரைக்குடி பழைய மருத்துவமனைக் கட்டடத்திலும், 9 9 72-ல் தேவகோட்டை அரசு மருத்துவமனையிலும் கண் நோயாளிகளுக்கு முன்பரிசோதனை நடத்தப்படும்.

கண் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியவர்களுக்கு மருந்து — உணவு — இட வசதி — கண்ணாடி ஆகியவை இலவசமாக அளிக்கப்படும்.

கண் அறுவைச் சிகிச்சை தேவையில்லாதவர்களுக்கு உரிய சிகிச்சை, முன்பரிசோதனை செய்யப்படும் இடங்களில் அளிக்கப்படும்.

"கண் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியவர்கள், 12—9—72 காலை மணிக்கே சிகிச்சை முகாமில் இருக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்"

என்று இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் சந்திரகுடன் அறிவிக்கிறார்.

புழக்கத்திலுள்ள ரூபாய் நோட்டுகள்

புதடில்லி, ஆக. 30-

இந்தியாவில் இப்போது ரூ. 236 34,91 922 மதிப்புள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருக்கின்றன.

இத்தகவலை, நாடாளுமன்ற மேலவையில், நிதித்துறை துணையமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்.

சிறைகள் பற்றி நாடாளுமன்றத்தில் பேசலாமா?

கழகஉறுப்பினர் எதிர்ப்பு: அமைச்சர் ஏற்பு-விளக்கம்

புதுடில்லி, ஆக. 31—

புக்களவையில், சிறைச்சாலைகள் பற்றி உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினர்.

உடனே, தி. மு. கழக உறுப்பினர் விசுவநாதன், 'சிறைச்சாலைகள், மாநில அரசின் நிர்வாகத்தில் இருப்பவை; அதுபற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கக் கூடாது' என்று தெரிவித்தார்.

உள்துறைத் துணையமைச்சர் ஆர். என். மிர்தா இதனை ஏற்றுக் கொண்டு கூறியதாவது:—

"அரசியல் சட்டப்படி சிறைகள் மாநில அரசுப் பிரச்சினைதான்; மத்திய அரசுக்குத் தனிப்பட்ட சிறைகள் எதுவும் கிடையாது."

தமிழ்நாட்டின் 12 ஆண்டுத் திட்டம்

இருநாள் கருத்தரங்கு சென்னையில்நடைபெறும்

சென்னை, ஆக. 30—

தமிழகத்தின் 12 ஆண்டு (1972—84) திட்டம் பற்றிய இருநாள் கருத்தரங்கு செப்டம்பர் 16-ம் நாள் சென்னையில் நடைபெறவிருக்கிறது.

நாடெங்கிலுமிருந்து நிதித் துறை நிபுணர்களும் — பொருளாதார வல்லுநர்களும் கலந்து கொள்ள இருக்கும் இந்தக் கருத்தரங்கை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைப்பார்.

இரண்டாம் நாள் கருத்தரங்கை முடித்துவைத்து மத்திய திட்டத் துறை அமைச்சர் டி. பி. தார் உரை நிகழ்த்துவார்.

தமிழ்நாடு திட்டக் குழு துணைத் தலைவர் எம். ஜி. இராஜாராம் இத்தகவலைத் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தனி நபர் வருவாயை 12 ஆண்டுக் காலத்தில் இன்றுள்ளதுபோல இரண்டு மடங்காக உயர்த்துவதை இலட்சியமாகக் கொண்ட தமிழகத் திட்டம் செயல்படுத்தக்கூடிய ஒன்று என்பதுடன் தேசிய வளர்ச்சிக் குழுவின் சிந்தனையை ஒட்டியுள்ள ஒன்றுமாகும்.

மாவட்டவாரியான திட்டம் செப்டம்பர் மாத இறுதிக்குள்ளும், தமிழ்நாடு முழுமைக்குமான திட்டம் 1973 மார்ச் மாதத்திலும் தயாராகிவிடும்.

5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய தமிழ்நாட்டுக்கான ரூ 1,300 கோடி திட்டம் இன்னும் இரு வார காலங்களில் தயாராகிவிடும்."

காஞ்சியில் அண்ணா அரங்கு— அண்ணா உருவச் சிலை திறப்பு

செப்டம்பர் 15-ல் விழா நடத்த நகராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

கல்வியமைச்சர் நாவலர் கலந்துகொள்வார்

காஞ்சிபுரம் ஆக. 31-

"காஞ்சிபுரத்தில் ரூ. 6-இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அரங்கையும் — அண்ணா சிலையையும் செப்டம்பர் 15 — அண்ணா பிறந்த நாளன்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக்கொண்டு திறந்து வைக்கப்படும்" என்று காஞ்சி நகராட்சி தீர்மானித்தது

அமைச்சர் நெடுஞ்செழியன் 'டாக்டர்' பட்டம் பெற்றதை யொட்டி அவருக்கு வரவேற்பு இதழ் ஒன்றை வாசித்தளிப்பது என்றும் நகராட்சி முடிவு செய்தது.

நகராட்சித் தலைவர் கே. டி. எஸ். மணி, கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை — நகராட்சியின் முன்னாள் தலைவர் தங்கவேல் முதலியார் ஆகியோர் மறைவுக்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது; உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

நகராட்சித் தலைவர் விளக்கம்

கூட்டம் முடிந்ததும், நகராட்சித் தலைவர் கே. டி. எஸ். மணி, நிருபர்களிடம் கூறியதாவது;—

"அறிஞர் அண்ணா அரங்கம் ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது; அதன் திறப்பு விழாவும் அண்ணா பிறந்தநாளன்று தான் நடைபெறும்.

சி. வி. எம். அண்ணாமலை எம். எல். ஏ. தலைமையில்—சி. வி. இராசகோபால் எம்.எல்.சி. முன்னிலையில் விழா நடைபெறும்.

பிறகு அண்ணா சிலை திறப்பு விழாவும், நாவலர் நெடுஞ்செழியனுக்கு வரவேற்பும் அளிக்கப்படும்.

பொதுக்கூட்டம்

அன்று இரவு 28-வது வார்டு தி. மு. க. சார்பில் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு அருகில் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்; அமைச்சர்நெடுஞ்செழியன் கலந்துகொண்டு பேசுவார்."

தீவிபத்தால் பாதிக்கப்பட்ட 273 குடும்பங்கட்கு....

ரூ. 21,840 உதவித் தொகை— தமிழக அரசு வழங்கியது

கோவில்கள் வழங்கிய வேட்டி—சேலைகள்

சென்னை, ஆக. 30—

சென்னை - புரசைவாக்கத்தில் தீவிபத்தில் வீடிழந்த குடும்பங்களுக்கு தலா ரூ. 80-ம், வேட்டி — சேலைகளும் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் வழங்கப்பட்டது

புரசைவாக்கம் — கிருஷ்ணபுரத்தில் கடந்த வெள்ளியன்று பயங்கரத் தீவிபத்து ஏற்பட்டது; அதனால் 300 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

தீவிபத்து நடந்த இடத்தை அமைச்சர் பேராசிரியர் பார்வையிட்டார்; தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளுக்கு அவர் ஆறுதல் கூறினர்.

அவர்கது தற்காலிகமாக வீடு அமைத்துக் கொள்வதற்காகத் தமிழக அரசு ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 வீதம் 273 குடும்பங்களுக்கு ரூ 21,840 உதவித்தொகை வழங்கியுள்ளது; அந்தத் தொகையை குடிசைவாசிகளுக்கு வழங்கினர்.

தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளுக்கு சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் தேவஸ்தானமும் — திருவேற்காடு தேவஸ்தானமும், வேட்டி — சேலைகள் வழங்கியுள்ளன, அந்த வேட்டி — சேலைகளை அமைச்சர் அன்பழகன் வழங்கினர்.

தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளுக்காக மாடி வீடுகளை குடிசைமாற்று வாரியம் கட்டி வருகிறது; அத்துடன், அவர்கள் தற்காலிகமாக வீடு அமைத்துக் கொள்வதற்காக ரூ 120 மதிப்புள்ள 3 கல்நார் கூரைகளை இலவசமாக வழங்க முன்வந்திருக்கிறது.

தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாசிகள், இந்தக் கல்நார் கூரைகளை குடிசைமாற்று வாரியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சேலத்தில் எவர்சில்வர் தொழிற்சாலை

'நியாயமான முடிவு' என அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக 31—

"எவர்சில்வர் உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையை துர்க்காபூருக்குப் பதிலாக தென்னிந்தியாவிலுள்ள சேலத்தில் ஏற்படுத்துவது என அரசு முடிவு செய்தது நியாயமே; ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகே இந்த முடிவு செய்யப்பட்டது"

என்று மக்களவையில், உருக்குத் துறை அமைச்சர் மோகன்குமாரமங்கலம் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"துர்க்காபூர் தொழிற்சாலையில் 18,000 டன் உற்பத்தி செய்யலாம் என முதலில் கருதப்பட்டது; ஆனால், 1970—71-ல் அங்கு 3,000 டன்கள்தான் உற்பத்தி செய்யப்பட்டன.

நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் நீதி வழங்க வேண்டும் என்றே அரசு விரும்புகிறது; ஆனால், புதிய தொழிற்சாலையை சேலத்தில் அமைப்பது என்ற முடிவு தவிர்க்க முடியாததாகும்."

நெய்வேலி மின்விசை

தமிழ்நாட்டுக்குத் தர டில்லி உடன்பாடு

புதுடில்லி, ஆக. 30—

"நெய்வேலி அனல் மின்விசை உற்பத்தியில் அதிகப்படியாக உள்ள மின்விசையைத் தமிழ்நாடு மின்விசை கிரிடுக்குத் தருவதென்று அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டுவிட்டதால், ஆந்திரப் பிரதேசத்துக்கு மின்விசையை உதவுவதென்ற பிரச்சினைக்கு இடமில்லை"

என்று, மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

"இருப்பினும், எப்போதெல்லாம் தமிழ்நாடு வசம் மின்விசை மிச்சமாக இருக்கிறதோ அப்போதெல்லாம், கோரிக்கையின்மீது ஆந்திராவுக்கு வழங்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டது.

1972 ஆகஸ்டு 14-ந்தேதி முதல் ஆந்திரம்—மைசூர் — தமிழ்நாடு—கேரளம் மின்விசை உற்பத்திகள் இணக்கமாகச் செயல்பட்டு வருகிறதென்றும், அனைவருக்கும் நன்மை கிடைக்கும் விதத்தில் அதிக பட்ச அளவுக்கு மின்விசை உற்பத்தியை திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது.

குறைந்தபட்ச போனசுத் தொகை 8.33 சதவிகிதத்துக்கு உயருமா?

வாக்குறுதி அளிக்க மக்களவையில் அமைச்சர் மறுப்பு

பொருளாதாரம் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறதாம் — எனவே உறுப்பினர்களின் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை

புதுடில்லி, ஆக. 31—

தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச போனசுத் தொகையை 8.33 சதவிகிதத்துக்கு உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி எதையும் அளிக்க மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர். கே. காடில்கர், மக்களவையில் மறுத்துவிட்டார்.

"குறைந்தபட்ச போனசப் பற்றி, போனசுப் பரிசீலனைக் குழுவின் அறிக்கை வந்ததும், நாட்டுப் பொருளாதாரம் முழுவதையும் குறிப்பாக நிறுவன ரீதியாகப் பணியாற்றும் தொழிலாளர்கட்கும் — மற்ற தொழிலாளர்கட்கும் இடையே ஊதியங்களில் உள்ள இடைவெளியைக் கருத்தில் கொண்டு அறிக்கை பரிசீலிக்கப்படும்; வேலையில்லாதவர்களின் சிரமங்களும் இதுபற்றி முடிவு செய்வதற்கான ஓர் அம்சமாக இருக்கும்" என்றும் அமைச்சர் கூறினர்.

"போனசு பற்றி ஒரு முடிவுக்கு வருமுன், நாட்டின் உற்பத்திப் பெருக்கம் — வேலையில்லாதோர் எண்ணிக்கை — கிராமப்புறங்களில் தொழிலாளர்களாக உள்ளவர்களின் குறைந்த ஊதிய நிலை ஆகியவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்த பிறகே போனசை உயர்த்துவது பற்றி முடிவு செய்ய இயலும்" என்றார்.

குறைந்தபட்ச போனசுத் தொகையை 8.33 சதவிகிதத்துக்கு உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கை பற்றி நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினர்.

"குறைந்தபட்ச போனசு என்பது ஒத்திவைக்கப்பட்ட ஊதியமேயாகும்; அதை உற்பத்தித்திறனுடனே அல்லது இலாபத்துடனே இணைக்கக்கூடாது" என்று உறுப்பினர்கள் கூறிய கருத்தை அமைச்சர் ஒப்புக்கொள்ளவில்லை.

இதுபற்றி அவர்மேலும் கூறியதாவது:—

"போனசுப் பட்டுவாடாச் சட்டம் உண்மையில் போனசை இலாபத்துடன் இணைத்திருக்கிறது; மேலும், உற்பத்தித் திறனுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்படுவதை ஆதரிக்கிறது.

போனசுக் கோரிக்கையை வெளியிடும்போது, உற்பத்தியையும் — உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் தொழிற்சங்க வாதிகள் வற்புறுத்த வேண்டும்.

வேலையில் இருப்பவர்களுக்கும் — வேலையில் இல்லாதவர்களுக்கும் — நிறுவன ரீதியாகச் செயல்படும் தொழிலாளர்களுக்கும் — மற்றத் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் கவனத்தில் கொண்டு தேசியப் பொருளாதாரத்தைப் பற்றியும் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பண்டிகை நாட்களுக்குள் போனசு பட்டுவாடா செய்வதற்கு வசதியாக அறிக்கையை அளிக்கும்படி அல்லது இடைக்கால அறிக்கையை அளிக்கும்படி போனசு பரிசீலனைக் குழுவுக்கு உத்தரவு பிறபிக்க முடியாது; அறிக்கையை எப்போது அளிக்கவேண்டும் என்பதைப் போனசுக் குழுதான் முடிவு செய்யவேண்டும்."

காகித உறை தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம்

"தமிழ்நாடு காகித உறை தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று நிர்மாணிக்கவும், அதன் மூலம் நமது தொழிலுக்கும்—அதன் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கும் உதவுகின்ற வகையிலும், அதில் பங்கு கொள்ளும் தொழிலாளர்களின் முன்னேற்றம் காணுதல் பற்றியும் ஆய்வு செய்யும்பொருட்டு 1—9—72 முற்பகல் 11-மணியளவில், சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி. தலைமையில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலுள்ள 'மாடர்ன் கேப்' உணவு விடுதியில் கூட்டம் நடைபெறும்; அவ்வமயம் தமிழ்நாடு அரசு கூட்டுறவுப் பதிவாளர் அவர்களும் பங்குற்று அரிய ஆலோசனைகளை வழங்குவார்" எனறு அமைப்பாளர் இரா. முமனோகரன் அறிவிக்கிறர்.

பாதிரிவேடு — மாதர்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டடத் திறப்பு விழா

1—9—72 மாலை 4-மணியளவில் மேற்படி பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நடைபெறும்; வரவேற்பு: இரா. கன்னையா; தலைவர்: கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.; திறப்பாளர்: தொழில் அமைச்சர் செ. மாதவன்; வாழ்த்துரை: ஆ. மாசிலாமணி, ஆ. கிருட்டினன், சி. ஏ. கலைமணி; நன்றியுரை: ஒ. இராமச்சந்திரன்.

ஈ. ஆர். கிருஷ்ணன் வலியுறுத்தல்

கழக உறுப்பினர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

8.33 சதவிகித போனசைத் தருவதால், அதிகமாகச் செலவாகி விடாது.

கம்பெனிகளின் இலாபத்தில் ஏற்பட்டுள்ள ரூ 4000 கோடி உயர்வைப் பார்க்கும்போது, குறைந்தபட்ச போனசை உயர்த்துவதால் ரூ. 250 கோடிதான் கொடுக்கவேண்டியிருக்கும்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

1—9—72

ஆரம்பாக்கம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பழைய கடை வீதியில்; வரவேற்புரை: தியாகராசன்; தலைவர்: இ. சி. கோபாலகிருட்டினன்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., ஆ. கிருட்டினன், மு. கேசவன், பா. அமீது, சி. ஏ. கலைமணி, த. ரா. வேலன்) கி. மணிவண்ணன், வே. தா. திருமாவளவன், கே. எம். அபுபக்கர்.

துணிவிலைகளின் உயர்வு கட்டுப்படுத்தப்படும்

வர்த்தகத்தில் ஒழுங்கீனங்களைக் களைய தண்டனைப் பிரிவுச் சட்டம் கடுமையானதாகும்

நியாய விலைக் கடைகளை நாடு முழுவதிலும் திறக்கும்படிப் பஞ்சாலைக் கார்ப்பரேஷனுக்கு அரசு தாக்கீது

புதுடில்லி, ஆக. 31—

துணி விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும்—துணி வர்த்தகத்தில் ஒழுங்கீனங்களைத் தடுக்கவும் நாடு முழுவதிலும் சில்லறை விற்பனை நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தும்படி பஞ்சாலைக் கார்ப்பரேஷனுக்குத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உடனடியாக இந்தக் கடைகளைத் திறக்கும்படி அரசாங்கத்துக்குச் சொந்தமான தேசியப் பஞ்சாலைக் கார்ப்பரேஷனிடம் கூறப்பட்டிருக்கிறது; இந்தக் கார்ப்பரேஷனின் நிர்வாகத்தில் 60 பஞ்சாலைகள் இருக்கின்றன.

சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் கண்ட்ரோல் ரகத் துணி வகைகளை விற்பதுடன், மற்ற ரக துணி வகைகளையும் நியாயமான விலைகளில் இந்தக் கடைகள் விற்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

"அவசியமானல் ஒழுங்கீனங்களைக் களைய இன்றியமையாப் பண்டங்களின் சட்டத்திலுள்ள தண்டனைப் பிரிவுகளைக் கடுமையாக ஆக்குவதற்கு அரசாங்கம் தயங்காது"

என்றெல்லாம் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா, அத்துறையின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறர்.

பிர்லா—டாட்டாக்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்

'குறிப்பிட்ட ஒரு சிலரிடமே செல்வம் குவிவதற்கு வழிகோலப்படுகிறது' என மக்களவையில் குற்றச்சாட்டு

பெருந் தொழிலதிபர்கள் மேலும் புதிய தொழில்கள் தொடங்கத் தடைவிதிக்க இயலாதாம் — கோரிக்கைகள் நிராகரிப்பு

புதுடில்லி, ஆக. 31—

"இந்தியாவிலுள்ள 15 பெரிய தொழில் நிறுவனங்களுக்கு மேலும் லைசென்சுகள் வழங்கத் தடை விதிக்க வேண்டும்" என்ற யோசனையை மக்களவையில் கேள்வி நேரத்தின்போது தொழில் வளர்ச்சித் துணையமைச்சர் சித்தேசுவர் பிரசாத் நிராகரித்தார்.

"1971 எப்ரல் முதல் 1972 ஜுன் வரையில் பிர்லாக்களுக்கு 17 தொழில் லைசென்சுகளும் டாட்டாக்களுக்கு 14 லைசென்சுகளும், தாபருக்கு 9 லைசென்சுகளும் வழங்கப்பட்டன" என்று மூலக் கேள்விக்குப் பதிலளிக்கையில் துணையமைச்சர் தெரிவித்தார்.

"உற்பத்தியை அதிகரிப்பதும் — அதேநேரத்தில் சிலரிடம் பொருளாதாரப் பலம் குவியாமல் தடுப்பதும் தொழில்துறைக் கொள்கையின் நோக்கமாகும்' என்றும் அவர் கூறினர்.

கழக உறுப்பினர் கேள்வி

"குறிப்பிட்ட ஒரு சிலரிடம் செல்வம் குவிந்துவிடக் கூடாது என்பது மத்திய அரசின் கொள்கையாகும்; எனவே, இந்தக் கொள்கைக்கு ஏற்ப, ஏற்கனவே பெரும் அளவில் செல்வம் திரட்டியுள்ள பெருந் தொழிலதிபர்களுக்கும் புதிய தொழில்களைத் தொடங்க உரிமம் அளிப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்யுமா?"

என்று கழக உறுப்பினர் கோ. விசுவநாதன் கேட்டார்; இதை அடுத்தும் பல உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் எழுப்பினர்.

கேள்விகளுக்கு மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம், துணையமைச்சர் சித்தேசுவர் பிரசாத் ஆகியோர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"பெருந் தொழிலதிபர்கள் மேற்கொண்டு புதிய தொழில்களைத் தொடங்க உரிமம் வழங்கப்படுவது நிறுத்தப்படமாட்டாது; பெருந் தொழிலதிபர்களுக்கு மேற்கொண்டு உரிமம் வழங்குவதைத் தடை செய்யும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை."

1971-ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பல பெருந் தொழிலதிபர்களுக்கு மத்திய அரசு தாராளப் போக்குடன் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான உரிமங்கள் வழங்கியிருப்பதாக உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்; 'கடந்த இரண்டாண்டுகளில் பெருந் தொழிலதிபர்களுக்கே அதிக அளவில் உரிமங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன' என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

"தேர்தல் நேரத்தில் வாங்கிய நன்கொடைகளுக்குப் பிரதி பலனாகத்தான் மத்திய ஆளும் கட்சியினர் பெருந் தொழிலதிபர்களுக்கு புதிய தொழில்களைத் துவங்குவதற்கான உரிமங்களை வாரி வழங்கியுள்ளனர்"

என்று கச்வாய் என்ற உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டை குறிப்பிட்டு அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியதாவது:—

"பெரிய தொழில் நிறுவனங்களுக்கு லைசென்சு வழங்குவதில் அரசினரின் தற்போதைய கொள்கை, 'லைசென்சு கோரிய அவை தொடங்கும் தொழில்கள் கூட்டுத் துறையில் இருக்க வேண்டும்' என்பதாகும்; இந்தப் புதிய கொள்கையின்படி மூன்று காகித ஆலைகளுக்கு லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது."

20,000 டிராக்டர்கள் இறக்குமதி செய்ய முடிவு

புதுடில்லி, ஆக. 29—

"இந்த ஆண்டில் 20,000 டிராக்டர்கள் இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று வேளாண்மைத் துறைத் துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டே, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

நாகர்கோவிலில் கலைஞர் நிகழ்ச்சிகள்:

தலைமைக் கழக அறிவிப்பு

செப்டம்பர் மாதம் 6-ந்தேதி நாகர்கோவிலில் குமரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் பல பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து – அதில் கழகத் தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்பியது.

அன்றையத்தினம் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், நாகர்கோவிலில் பல பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறர் என்ற செய்தியை அறிந்தது, கழகத்தின் சார்பாகத் தாம் கலந்துகொள்ளவிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ரத்து செய்துவிட்டார்கள்.

ஆனல், சில செய்தித் தாள்களில், 'போட்டிப் பிரச்சாரக் கூட்டங்கள்' என்று தலைப்பிட்டுச் செய்திகள் வந்துள்ளன; 'தவருன அடிப்படையில் அச்செய்தி வெளிவந்திருக்கிறது' என்பதைத் தலைமைக் கழகத்தின் சார்பில் துணைப் பொதுச்செயலாளர் க. இராசாராம் தெரிவித்துக் கொள்கிறர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]